
# வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு

## The Judgement to Come

J.C. Choate



**நீங்கள் நினையாத**
**நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்;**
**ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.**

– பைபிள்

## வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு

இப்பொழுது இருக்கும் வாழ்வு மட்டுமே உண்மை என்றும், இதற்கு பின் வாழ்வு இல்லாதது போலவும், நியாயத்தீர்ப்பு என்று ஒன்று நடக்கவே நடக்காது என்பது போலவும் மக்கள் எப்பொழுதும் இவ்வாழ்க்கையில் வாழ்ந்து, நடந்து கொள்கின்றனர். ஆனால் **நம் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்று நிச்சயம் உண்டு என பைபிள் போதிக்கின்றது.**

**அந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதை பைபிள் வசனங்கள் எவ்வாறு விளக்குகின்றன?**

"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினியைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படதக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது," (2 தெச 1:7-9).

''எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." (1 கொரி. 15:52).

"அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். பின்பு நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்;



அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாத்தீர்ப்படைந்தார்கள்". (வெளி 20:9-12).

❖ **அந்த நாள் எப்பொழுது என்பது ஒரு மனிதனுக்கும் தெரியாது . அது தேவனால் நிர்ணயிக்கப்பட்ட நாள்.**

"அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே," (எபி : 9:27) என்று வசனங்களில் வாசிக்கின்றோம்.

❖ **இதுவரை வாழ்ந்த எல்லோரும் அல்லது பூமியில் யார் வாழ்ந்திருந்தாலும், வாழப்போகிறவர்களும் அங்கே இருப்பார்கள்.**

பவுல் எழுதும்போது, "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். " (2 கொரி5:10) என்கிறார்.

மேலும் அவர் கூறுகையில், "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:11) என்றார்.

❖ **தேவன் எல்லோரையும் கிறிஸ்துவைக்கொண்டு, அவருடைய வசனங்களின் மூலம் நியாயந்தீர்ப்பார்.** அத்தேனேயர்களுக்கு பவுல் விளக்கும்போது, "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாந்தீர்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழும்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்'' (அப்17:30,31). என்று கூறுகிறார். மேலும் இயேசு கிறிஸ்து எச்சரிக்கையில், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான்



சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" (யோவா. 12:48), என்கிறார்.

''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?'' (1பேதுரு 4:17).

❖ **பேதுருவின் இந்த வாக்கியம், நியாயத்தீர்ப்பில் உள்ள பிரிவினைக் கோட்டை அடையாளம் காண உதவுகிறது. "தேவனுடைய வீடு"** (1 தீமோ. 3:15). என்பது தான், **தேவனுடைய வீட்டார்"** (எபே 2:19), **"ராஜ்ஜியம்"** (எபே. 5:5), **"சரீரம்"** (1 கொரி 12:27), **"சபை"** (கொலோ 1:24), **"கிறிஸ்துவின் மணவாட்டி"** (எபே 5:23, 31,32) என்பவைகளாக உள்ளன. **முதலாவதாக, நாம் அனைவரும் நியாயத்தீர்ப்பில் காப்பாற்றப்படும்படி அந்த சரீரத்தில் இருக்க வேண்டும்.**

சரி, அந்த சரீரத்திற்குள் நாம் எப்படி நுழைவது? பேதுரு சொல்வதைப் போல, "சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதன் மூலம்". "எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" என்று 1 கொரி 12:13 விளக்குகின்றது. மேலும் ஞானஸ்நானத்திலே நாம் கிறிஸ்துவுடன் கூட அடக்கம்பண்ணப்பட்டோமானால், அவருக்குள்ளாக அந்த புதிய வாழ்விற்கும் நாம் எழுந்திருப்போம் (ரோமர் 6:3,4).

❖ கிறிஸ்தவர்களாக, தேவனுடைய ஆவிக்குரிய நிழலிலே பாதுகாப்பாகவும் கீழ்ப்படிதலோடும் நாம் வாழ்ந்தால், நியாயந்தீர்ப்பை உறுதியுடனும் நம்பிக்கையுடனும் எதிர் கொள்ளலாம். நாம் வாழ்ந்த வாழ்க்கையின்படி, நம்முடைய நினைவுகளின்படி, வார்த்தைகளின்படி தேவனுடைய வசனத்தைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுவோம்.

"நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான் ; பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் உன்



வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்" (மத் 12:35-37).

❖ **ஆண்டவர், மனிதர்கள் மீது பாகுபாடு காட்டுகிறவர் இல்லை.** கொலோசேயில் உள்ள சகோதரர்களிடம் பவுல் கூறுகையில், ''அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை." (கொலோ.3:25) என்றார்.

❖ **நியாயத்தீர்ப்பு இறுதியானது.** ஒருவர் மரித்தால், அவர், ஒன்று ஆண்டவருக்குள் பாதுகாப்பாக இருப்பார் ; இல்லையெனில் கிறிஸ்துவுக்கு கீழ்படியாமல், தன் பாவங்கள் மன்னிக்கப்படாமல் இருப்பார். ஆண்டவருக்கு முன்சென்று நின்றபின் (நியாயத்தீர்ப்பிலே) அவர், தன் நிலையை மாற்ற இயலாது! அவருடைய உறவினர்கள் அவருக்காக ஜெபித்தாலோ, அல்லது மற்றவர்களுக்கு பணம் கொடுத்து அவருக்காக ஜெபிக்கச் சொன்னாலோ, அவர் மரித்த பின் இரட்சிக்கப்படமாட்டார். அவருக்கு இரண்டாம் தருணம் கிடையாது. ஆகையால் தான் ஒருவர், இந்த வாழ்விலேயே தேவனை சந்திக்க ஆயத்தப்பட வேண்டும்; அது அவருக்கு கீழ்ப்படிவதின் மூலமும், மரணபரியந்தம் உண்மையாய், விசுவாசமாய் கீழ்படிதலுடன் இருப்பதினாலேயுமே சாத்தியம். (மாற்கு 16:16 ; வெளி 2:10).

❖ **ஆண்டவர் தீயவர்களுக்கு நித்திய தண்டனையையும், நீதிமானுக்கு நித்திய வாழ்வையும் அருளுவார்** (மத் 25:46). இவை இரண்டுமே, ஒன்று மற்றொன்றைப் போல் நித்தியமானது. மற்றொரு வார்த்தையில், இரட்சிக்கப்படாத பாவியான தேவபக்தியற்ற அவிசுவாசிகள் அனைவருமே நித்திய நித்தியமாய் தண்டிக்கப்படுவார். ஒருவேளை சிலர் கூறுவது, "இது அநியாயம்! நிச்சயமாக அன்பின் தேவன் இப்படி தண்டிக்கவே மாட்டார்!" ஆனால், இதற்காக நாம் தேவனை குறைகூறவே முடியாது. அவர் மனிதகுலம் முழுவதையும் நேசித்து, ஒவ்வொருவரின் இரட்சிப்பிற்காக தன் குமாரனையே கொடுத்தார். அப்படியிருந்தும், யாரெல்லாம் அவருடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கத்தை புறக்கணிக்கின்றனரோ, அவர்கள் எல்லாம் அவருடைய செயலின் விளைவுகளை சந்தித்தே ஆக வேண்டும். மற்றபடி யாரெல்லாம்



தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரிடத்தில் விசுவாசமாக இருக்கின்றனரோ, அவர்கள் அனைவரும் புதிய வானம், புதிய பூமியில் ஆண்டவருடன் என்றென்றும் இருப்பார்கள். (வெளி 21, 22).

"சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது ; அப்பொழுது மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படா தவனெவனோ, அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்". (வெளி. 20:13-15)

"இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். அமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்." (வெளி 22:20).

நீங்கள், வரவிருக்கும் அந்த நியாயத்தீர்ப்பை சந்தோஷமாக சந்திக்க விரும்பினால், எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**கிருபையுள்ள வார்த்தை** T.V. நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. ஞாயிறு காலை 7-00 மணி**
**நம்பிக்கை T.V. ஞாயிறு மதியம் 3-30 மணி**

**தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற**
**கிருபையுள்ள வார்த்தை**
தபால்பெட்டி எண் 15, அரசரடி, மதுரை – 625 016.
போன் : 92 4421 4421, 92 4431 4431

எங்களுடன் தொடர்பு கொள்ள :

**கிருபையுள்ள வார்த்தை**
தபால்பெட்டி எண் 15, அரசரடி
மதுரை – 625 016
போன் : 92 4421 4421, 92 4431 4431